விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI




சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 02 திங்கட்கிழமை (15.04.2002) தொலைபேசி 3378 ஒலி 117

ஒடுக்கப்படும் மக்களுக்காக குரல் கொடுக்க

# முஸ்லிம் – மலையக தலைவர்கள்

# புலிகளுடன் இணைய வேண்டும் !

## தலைவர் பிரபா கோரிக்கை

(கிளிநொச்சியிலிருந்து நமது நிருபர்)

**புதிதாக எழுந்துள்ள தற்போதைய அரசியல் வரலாற்றுச் சூழ்நிலையில் வடக்குக் கிழக்கு அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி முஸ்லிம் மக்களின் அரசியல் தலைவர்களும், மலையக மக்களின் அரசியல் தலைவர்களும் ஒன்றுபட்ட சக்திகளாக விடுதலைப்புலிகள் அமைப்புடன் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப் புலிக ளின் தலைவர் வே.பிரபாகரனை நேற்று சந்தித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் தலைமை யிலான தூதுக் குழுவினரிடமும், மலையக மக்கள் முன்னணித்தலைவரும் அமைச்சரு மான பே.சந்திரசேகரன் தலைமையிலான தூதுக்குழுவினரிடமும் மேற்கண்டவாறு தலைவர் வே.பிரபாகரன் வேண்டுகோள் விடுத்தார்.

மலையகத் தமிழ்த் தலைவர்களும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிற்குமிடையிலான சந்திப்பு நேற்றுக் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் நடுவப் பணியகத்தில் இடம் பெற்றது.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலமையிலான தூதுக் குழுவினர் நேற்றுக்காலை 9.00 மணிக்கும் அமைச்சர் பெ.சந்திரசேகரன் தலமையிலான தூதுக் குழுவினர் பி.ப. 1.30 மணிக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை சந்தித்திருந்தனர்.

அமைச்சர்கள் ஆ.தொண்ட மான், பெசந்திரசேகரன் ஆகியோர் அடங்கிய



குழுவினர் விமானப் படைக் குச் சொந்தமான ஹெலியில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் வந்திறங்கினர்.

(8ம் பக்கம் பார்க்)

## பொங்கு தமிழ் எழுச்சி 17ம் திகதி நடைபெறும்

### எங்கும் எழுச்சி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் நாளை மறுதினம் புதன்கிழமை இடம் பெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்ச்சியை ஒட்டி யாழ் குடாநாடெங்கும் எழுச்சி நிகழ்வுகள் பரவலாக இடம் பெற்று வருகின்றது.

பொங்கு தமிழ் எழுச்சிக்குரிய மகுட வாசகங்கள் தாங்கிய பதாகைகள் குடா நாட்டின் முக்கிய சந்திகள் தோறும் கட்டப்பட்டிருப்பதுடன் சிவப்பு மஞ்சள் கொடிகளும் கட்டப்பட்டுள்ளன.

11ம் திகதி வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்ட பொங்கு தமிழ் எழுச்சிவாரத்தை ஒட்டி குடா நாட்டின் பல்வேறு இடங்க ளிலும் பொங்குதமிழ் எழுச்சி தொடர்பான கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருகின்றன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் வீடு வீடாகச் சென்று பொங்கு தமிழ் நிகழ்ச்சி தொடர்பான விளக்கங்களை அளித்து வருகிறார்கள். யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் நேற்றுத் திருநெல்வேலிப் பகுதியில் பிரசசார வேலைகளில் ஈடுபட்டனர்.

பொங்கு தமிழ் நிகழ்வை ஒட்டி நாளை மறுதினம் புதன் கிழமை நல்லூர், கொக்குவில், யாழ்ப்பாணம் ஆகிய 3 இடங்

(8ம் பக்கம் பார்க்)

## சுய நிர்ணய உரிமையில் புலிகளுடன் இணைந்து செயற்படுவோம்

### அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் எடுக்கவிருக்கும் சகல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பூரண ஆதரவு வழங்குமென அமைச் சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோருடன் நேற்று கிளிநொச்சியில் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ஆ.தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இச்செய்தியாளர் மாநாடு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இடம்பெற்றது.

அம்மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சந்திப்பு ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சிறுபான்மைத் தமிழ் மக்க ளுக்கு இழைக்கப்படும் அநீதிக ளிற்கு விடுதலைப் புலிகளுடன் இணைந்து குரல் கொடுக்கப் போவதாகவும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் இணைந்து செயற்படுவதெனவும் இருதரப்பினராலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (வ)

## பேச்சு வார்த்தைக்கு வசதியாக புலிகளின் தடையை நீக்கவேண்டும்

### அமைச்சர் ஹக்கீம் கருத்து

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையிலான நேரடிப் பேச்சுவார்த்தைகளுக்கு புலிகள் மீதான தடை முட்டுக்கட்டையாக இருக்ககுமானால் அதனை நீக்குவதே ஒரே வழியென தாம் கருதுவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபா கரனுடன் கிளிநொச்சியில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தொடர்பாக நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியா ளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் புலிகள் மீதான தடை என்பதனை தற்போது உணர்வு பூர்வமாகவே அனைவ

(8ம் பக்கம் பார்க்க)



நவசமசமாஜக் கட்சியின் தலைவரும் முன் னாள் எம்பியுமான வாசுதேவ நாணயக்காரா தலைமையிலான குழுவினர் நேற்று வலம்புரியின் அலுவலகத்திற்கு வருகை தந்த போது நிர்வாக இயக்குனர் சி. வெற்றிவேலாயுதம் அவரை வரவேற்பதையும் ஆசிரியர் பீடத்தினர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## தலைவர் பிரபா தொடர்பான முதல்வர் ஜெயாவின் கூற்றிற்கு தமிழகக் கட்சிகள் கண்டனம்

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் நாட்டில் செயற்படுவ தற்கு ஆதரவு அளிப்பவர்கள் மீது "போடோ" சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தமி ழக முதவர் செல்வி ஜெயலலிதா வின் கூற்றிற்கு தமிழ் அரசியல் கட்சிகள் தமது கண்டனத் தையும், எதிர்ப்பையும் தெரிவித் துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளுக்கு தமிழ் நாட்டில் ஆதரவு அளிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா கூறியிருப்பதைக் கண்டித்து

(2ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் யாழ் அலுவலகம் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பணிமனை இன்று காலை 10 மணிக்கு கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியில் உள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. (இ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## அமைதியான சூழலில் எளிமையான முறையில் புத்தாண்டுக்கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டம் அமைதியானமுறையில்யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

குடாநாட்டு ஆலயங்களில் விசேடபூசை வழிபாடுகள் நடைபெற்றன இந்துக்கள் கைவிசேடம் பரிமாறி ஆலய தரிசனங்களில் ஈடுபட்டனர், கிராமங்களில் பாரம்பரிய விளையாட்டுக்கள் கலைநிகழ்வுகள் நடைபெற்றன.

காலையில் நகரப்பகுதி வர்த்தகநிலையங்கள் திறந்திருந்தன வங்கிகளில் நண்பகல்வரை பணக்கொடுக்சல் வாங்கல்கள் இடம்பெற்றன படையினரும் மகிழ்ச்சியாக புத்தாண்டு நிகழ்ச்சிகளில் பங்குகொண்டனர்.

இதேவேளை பொங்கு தமிழ் வாரம் அனுட்டிக்கப்படுவதால் பல்கலைக்கழக சுற்றாடல் மற்றும் யாழ்நகரில் எழுச்சிகீதங்கள் ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

வெடியோசைகள் பதற்றங்கள் அற்ற நிலையில்மகிழ்ச்சிகரமாக இம்முறை புத்தாண்டு மக்களால் கொண்டாடப்பட்டது. (உ-106)

---

### முதல்வர்

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் செயலர் வை. கோபாலசாமி தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வை கோபாலசுவாமி செய்தியாளரிடம் தெரிவித்தபோது கூறியிருப்பதாவது;

எதேச்சாதிகாரத்தையும் அடக்கு முறைகளையும் எதிர்த்து அடிப்படை உரிமைகளுக்காக தான் எப்போதும் போராடத் தயங்கவில்லை என்றும், உலகிலுள்ள எந்த சக்தியும் தன்னை அச்சுறுத்த முடியாது என்றும் கூறியுள்ளார்.

புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி கருத்துத் தெரிவிக்கையில் கூறியிருப்பதாவது;

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு அளிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்திருப்பது அவ்வளவு நல்லதல்ல. இலங்கை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் விடுதலைப் புலிகளைப் பலர் ஆதரிக்கிறார்கள் என்று கூறிய அவர் புதிய தமிழகம் கட்சி எந்தப் போராளி அமைப்பிற்கும் ஆதரவு இல்லை என்றும் கூறினார். (வ)

---

திரைப்பட கூ. தா. பணிப்பாளர் சபைக்கு தமிழரை நியமிக்குக

# கோரிக்கையின் வெற்றிக்காக வீதியில் இறங்கிப் போராடுவோம்

## யாழ். சலனசித்திரம் பிரதமருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூர்த் தமிழ்ச் சினிமா வளர்ச்சி குறித்தும் திரைப்படக் கூட்டுத்தாபனப்பணிப்பாளர் சபைக்கு தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவர் நியமிக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் சலன சித்திரம் யாழ்ப்பாணம் என்ற அமைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு கடிதம்ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

மேற்படி அமைப்பின் பொதுச் செயலாளரும் பிரசாரச் செயலாளரும் ஒப்பமிட்டு அனுப்பிவைத்துள்ள கடிதத்தின் விபரம் வருமாறு,

இதேவிடயம் தொடர்பாக ஐந்து கோரிக்கைகள் அடங்கிய 28.12.2001 திகதியிடப்பட்ட மகஜர் ஒன்றைத் தங்களுக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பியிருந்தோம் இன்றுவரை அதற்கான பதில் எதுவும் எமக்கு கிடைக்க வில்லை

கடந்தகால ஆட்சித்தலைவர்களைப்போலவே தாங்களும் உள்ளூர்த் தமிழ்ச் சினிமா வளர்ச்சியில் அலட்சியப் போக்கைக் கொண்டுள்ளீர்களோ என நாம் சந்தேகிக்கும் நிலையிலுள்ளோம் அதே மகஜரின் பிரதியொன்றைதங்கள் பார்வைக்காக மீண்டும் இத்துடன் இணைத்து அனுப்புகின்றோம் எமது கோரிக்கைகளின் வெற்றிக்காக நாம் வீதியில்இறங்கிப் போராடும் நிர்ப்பந்தம் உருவாவதைத் தவிர்க்கும்முகமாக உடனடியாக எமக்குநிதி வழங்கப்படவேண்டும் என்பணிவுடன் கோருகிறோம்

திரைப்பட கூட்டுத்தாபன பணிப்பாளர் சபைக்கு தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட ஒருவர் நியமிக்கப்படவேண்டுமென்பது எமது கோரிக்கைகளில் ஒன்று அவ்வாறு நியமிக்கப்பட வேண்டிய ஒருவராக க.தேவதாசன் என்பவரை நாம் சிபார்சு செய்கிறோம்

சினிமா சார்ந்த கல்வி தொழில்நுட்பம், தயாரிப்பு வர்த்தகம், இரசனை, கலைஞர் நலவுரிமை ஆகியவற்றில்துறைதேர்ந்தவரும், சுதேசிய உணர்வு கொண்டவருமான இவர்மட்டுமே இவ்நியமனத்திற்கு தகுதியும் தகைமையும் உள்ளவரென நாம் நம்புகிறோம்

கட்சி, இன, மத பிரதேச வேறுபாடுகளற்று உள்ளூர்ச் சினிமாத்துறையின் துரிதவளர்ச்சிக்காகத் தம்மை அர்பணித்துச் செயற்படக் கூடியவர் இவர் என்பதனையும் இங்கு உறுதிப்படுத்துகின்றோம் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பதுட்டுள்ள (உ-106)

---

## பனைவளக் கண்காட்சி

# போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச்சபையினால் அண்மையில்நடந்தப்பட்ட பனைவளக் கண்காட்சி மற்றும் பேச்சு, கட்டுரை போட்டிகளில் பரிசுபெற்றவர்களின் விபரங்கள் வருமாறு.

பனைஓலைஉற்பத்தி
முதலாம் இடம்
க.மார்க்கண்டு(சங்கானை)
2,3,4,5ம்இடம் திருகோணமலை கைப்பணி உற்பத்தி நிலையம்.

பனைமரஉற்பத்தி
முதலாம்இடம்
சீ.பிரகாஸ் (திருநெல்வேலி)
2,3ம்இடம்
எஸ்.பரம்பொருள் (யாழ்ப்பாணம்)

நார் உற்பத்தி
1.2,3ம் இடம்
ரி.மயில்வாகனம் (மட்டக்களப்பு)

தும்பு உற்பத்தி
முதலாம் இடம்
கற்பிட்டி தும்புஉற்பத்திநிலையம்

இரண்டாம் இடம்
து.கவிதா(வேலணை)
மூன்றாம் இடம்
து.வசந்தலாதேவி (வேலணை)
நான்காம் இடம்
ம.ரேணுகா(வேலணை)
ஐந்தாம் இடம்
வி.கோமதி (வேலணை)

ஏனைய உற்பத்திகள்
முதலாம் இடம்
யாழ்ப்பாணம் வடிவமைப்பு நிலையம்
இரண்டாம் இடம்
பருத்தித்துறை சத்துணவுக் கூடம்
மூன்றாம் இடம்
கு.மயூர்தினி

பேச்சுப் போட்டி (கனிஷ்ட பிரிவு
முதலாம் இடம்
இ.சஸ்மிதா (வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை)
இரண்டாம் இடம்
தெ.முகுந்தன் (யாழ்.மத்திய கல்லூரி)
மூன்றாம் இடம்
ப.உபேந்திரா (யாழ்.மத்திய கல்லூரி

பேச்சுப்போட்டி (சிரேஷ்ட பிரிவு
முதலாம் இடம்
தெ.ஹர்சன்(யாழ் மத்தியகல்லூரி)
இரண்டாம் இடம்
அன்ரன் ரஞ்சித்குமார் (வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி)
மூன்றாம் இடம்
யோ.அபிராமி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

கட்டுரைப் போட்டி
முதலாம் இடம்
சி.சாலினி(வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
இரண்டாம் இடம்
ச.பிரதீபன்(வட்டு யாழ்ப்பாணக்கல்லூரி
மூன்றாம் இடம்
யோ.அபிராமி( வேம்படிமகளிர் உயர்தரப்பாடசாலை. (உ)

---

## ரத்வத்த இன்று ஆஜர்

(கொழும்பு)

கண்டி உடத்தலவன்னபடு கொலை சம்மந்தமாக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுரத்த ரத்வத்தையும் அவரது இருபுதல்வர்களும் இன்று தெல்தெனிய நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (வ)

### கலந்துரையாடல்

வலிமேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும்,

உடுவில், தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைத்துறை வளாகத்திலும்,

யாழ். கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான கலந்துரையாடல் காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ந)

---

# கேள்வி அறிவித்தல்

## பருத்தித்துறை நகராட்சி மன்றம்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் பருத்தித்துறை நகர சபைத் தலைவரினால் 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ந் திகதி நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 1.30 மணிக்கு கேள்விச் சபையால் பரிசீலனைக்கெடுக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பிப்பவர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தால் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் 9 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கிய பதிவுப் புத்தகத்தினை கேள்விக்காரர் சமர்பபித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களைப் பருத்தித்துறை நகராட்சி மன்றத்தால் 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆந் திகதி முதல் ஏப்ரல் மாதம் 25 ந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் வேலைக்கு நேரே காட்டப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பணத்தையும் கேள்வி வைப்புப்பணத்தையும்செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

காரணம் ஏதும் கொடுக்காமல் மிகக் குறைந்த அல்லது வேறு எந்தக் கோரிக்கையோ ஏற்க அல்லது நிராகரிக்க கேள்விச்சபைக்கு உரிமையுண்டு.

| வேலை விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் |
|---|---|---|
| 1. மீன் சந்தை விரிவாக்கம் | 250,- | 1500/- |
| 2. நீர் வழங்கலுக்கான நீர்த்தாங்கி அமைத்தல் | 500/- | 4500/- |

மேலதிக விவரங்களை பருத்தித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நா.மணிவண்ணன் ஜே.பி.யூ.எம்
உப-தலைவர்
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை, 2002.04.12

(சி-3955)

---

## இஸ்ரேல்படைமுற்றுகையுள் பலஸ்தீனத் தேவாலயம்

### அகப்பட்டோர் அடிப்படைவசதியின்றி அவதி

(ஜெருசலேம்)

இஸ்ரேல் படையினர் பலஸ்தீனத்தில் முற்றுகையிட்டுள்ள தேவாலயத்தில் உள்ளவர்கள் தமக்குமனிதாபிமான முறையில் உணவு, நீர் மருந்து என்பனவற்றை வழங்கி உதவுமாறு போப்பாண்டவரிடமும் ஐக்கிய நாடுகள் மன்றத்திடமும் அவசர கோரிக்கை ஒன்றைவிடுத்துள்ளனர்.

அவர்களது வேண்டுகோளில் தாம் கொஞ்சம்கொஞ்சமாக இறந்துகொண்டிருப்பதாகவும் அதனைதடுப்பதற்கு தமக்குவேண்டிய உதவிகளை வழங்குமாறும் கோரியுள்ளனர்

இதேவேளை கிறிஸ்தவ மதத்தின் பதின்மூன்றுபிரிவுகளைச் சேர்ந்த தலைவர்கள் மேற்படி தேவாலயத்தினுள் உள்ளவர்களுக்குவேண்டிய உதவிகளைச் செய்யுமாறு அமெரிக்கவெளியுறவுச் செயலர் கொலின் பவலிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் (செ)

---

சீனக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்ட

## வடகொரிய கப்பலை மீட்க ஜப்பான் திட்டம்

(பீக்கிங்)

சீனக் கடற்பரப்பில் மூழ்கிய வடகொரியாவின் வேவுக் கப்பலை மீட்டெடுக்க ஜப்பான் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடகொரியாவின் மூழ்கடிக்கப்பட்டது போன்ற ஒரு கப்பல் சீனாவின் சங்காய் இராணுவ பரப்பினுள்தடுத்து நிறுத்தப்பட்ட போது செய்மதி மூலம் அதனை படம் பிடித்து அமெரிக்கா ஜப்பானுக்கு கொடுத்திருந்தது.

செய்மதி மூலம் படம்பிடிக்கப்பட்ட அதே கப்பலையே ஜப்பானிய கடலோர காவல் படையினர் மூழ்கடித்துள்ளனர் என்ற சந்தேகம் எழத்தொடங்கிய காரணத்தாலேயே மூழ்கடிக்கப்பட்ட கப்பலைமீட்கும் பணியில் ஜப்பான் முயற்சியெடுத்துள்ளது.

ஜப்பானிய கடலோர காவல் படையினருடன் ஏற்பட்ட பீரங்கித் தாக்குதலின் போது வடகொரிய கப்பல் கடந்த டிசம்பர் மாதம் மூழகடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ8)

# மாந்திரீகத்தினால் மனநோய் குணமாகாது

## சர்ப்பபூஜை செய்து சாமியார் ஏமாற்றினார்

சரஸ்வதி காலையில் எழுந்தவுடன் கையில் ஒரு செய்திப் பத்திரிகையை எடுப்பாள், தனது வீட்டு வராந்தாவிலுள்ள ஒருநாற்காலியில்வந்து அமர்ந்தால் இரவுவரை எழுந்திருக்கமாட்டாள் கையில் செய்தித்தாளை ஏந்திய வண்ணம் அதையே உற்றுநோக்கியபடி அமர்ந்திருப்பாள். சரஸ்வதி அந்தப்பத்திரிகை முழுவதையும் படிப்பாளென்று எவரும் நினைத்தால் அது தவறு, ஒருவரியைக் கூடப் படிக்கமாட்டாள்.

பரிதாப நிலை

காலை முதல் இரவு வரை கண்கள்தான் அதிலலயித்திருக்குமேதவிர, அதிலுள்ளவை எதுவும் அவள் மூளையில் படவே மாட்டாது. சரஸ்வதியைச் சாப்பிட அழைத்துச் செல்ல அவள் தாயார் படும் பாட்டைப் பார்த்தால்பெரும் பரிதாபமாகஇருக்கும் நான்கு நாட்கள் காய்ச்சலாகப் படுத்திருந்து விட்டு எழுந்த சரஸ்வதி, எவரும் எதிர்பாராத வகையில் இந்தப்பரிதாபத்துக்கு ஆளானாள்.

இராமநாதன் என்ற அரசாங்க உத்தியோகத்தரின் மகளாகச் சரஸ்வதிபிறந்தாள் கந்தசாமி என்று அவளுக்கு ஒரு அண்ணனும் உண்டு. யாழ்ப்பாணத்தில் பிறந்த சரஸ்வதியும், அவள் அண்ணனும் யாழ்ப்பாணத்திலேயே வெவ்வேறு பாடசாலைகளில் கல்வி பயின்றனர் 1945 ஆம் ஆண்டு கொழும்பில் கடமையாற்றிக் கொண்டிருந்த இராமநாதன் தனது குடும்பத்தைக் கொழும்புக்குஅழைத்துவந்தார். கந்தசாமி பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். சரஸ்வதி படிப்பைநிறுத்த வேண்டியதாயிற்று கந்த சாமியும் பட்டதாரியாகி ஒரு வெளிநாட்டு ஸ்தாபனமொன்றில் கடமையாற்றி வந்தார்.

1947ஆம் ஆண்டில் தான் சரஸ்வதிக்குக் காய்ச்சல் கண்டது. இதன் பிறகுதான் அவள் பத்திரிகையைப்பிரித்து வைத்த வண்ணம் இருக்க ஆரம்பித்தாள். இப்படியே சிறிது காலம் சென்றதும் அவள் தனக்குத்தானே பேசுவதும், சிரிப்பதுமாக இருக்கவும் முற்பட்டாள்.

திருமணம் அவசியம்

சரஸ்வதியின் அண்ணன்கந்தசாமி அடிக்கடிஎன் வீட்டிற்கு வருவது வழக்கம். ஒரு நாள் தனது தங்கையின் விசித்திரமானநடத்தை பற்றிக் கூறினார். இதைக் கேட்ட நான் ஒரு குறிப்பிட்ட தினத்தில் சரஸ்வதியை எனது வீட்டிற்கு அழைத்துவரும்படிகூறினேன்- சரஸ்வதியும் எனது இல்லத்துக்கு அழைத்து வரப்பட்டாள். அவளும் நானும் எனது மனைவியும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தோம். முடிவில் சரஸ்வதியின் பெற்றோரையும் கந்தசாமியையும் அழைத்து, சரஸ்வதிக்குக் கூடிய விரைவில் திருமணம் செய்து வைக்கும்படியும், வயதிற்கு மேலான உடல் வளர்ச்சியே அவளை இந்த நிலைக்கு உருவாக்கியுள்ளதென்றும்கூறி அனுப்பினேன்.

சாமியர் வந்தார்

இதன் பின் ஒரு சில தினங்கள் கழித்து, ரகுபதி என்ற இராமநாதனின் உதவியாளர்

### டாக்டர் ஏபிரஹாம் கோவூர்

ஒருவர் சாமியார், ஒருவர் இருக்கிறார் அவர் சகல நோய்களையும் குணப்படுத்துவதில் வல்லவர்' என்று ஒருசாமியாரைப்பற்றி வர்ணித்திருக்கிறார்: இந்தச்சாமியாரை அழைத்துச் சரஸ்வதியைக் காண்பிக்க வேண்டும் என்ற எண்ணம் இராமநாதனுக்குப் பிறந்தது, இதன்படி ரகுபதியின் உதவியுடன் அந்த அற்புதச் சாமியார் அழைக்கப்பட்டார்.

சரஸ்வதியின் கதைகளைக் கேட்டசாமியார் சிறிது நேரம் கண்களை மூடித்தியானம் செய்தார், பின் கண் விழித்த அவர், இவற்றிற்கெல்லாம் காரணம் சரஸ்வதியின் உறவினர் ஒருவர்தான் என்றார், பொறாமை காரணமாக உணவில் விஷம் கலந்து கொடுத்திருக்கிறார்கள், இதனால் தான் சரஸ்வதிக்கு இந்தப்பரிதாப நிலை ஏற்பட்டதென்றும் சொன்னார், 'சர்ப்ப பூஜை செய்தால் இந்த விஷம் வெட்டப்பட்டு விடும் என்றும் அவர் வழிகூறினார்.

திருமதி இராமநாதன் சாமியாரின் கூற்றை முழுக்கமுழுக்க நம்பினார் ஆனால் இராமநாதனுக்கு இதில் நம்பிக்கையில்லை ஆனால் மனைவியின் பிடிவாதத்திற்கு இடம் கொடுத்தார். சர்ப்பபூஜை ஏற்பாடுசெய்யப்பட்டதுசரஸ்வதி ஒருகட்டைமீது அமர்ந்திருக்க எதிரில் அமர்ந்திருந்த சாமியார் புகைமண்டல மெழுப்பி மந்திரங்களோதிச்சர்ப்பபூசையை ஆரம்பித்தார்

பால்செம்பொன்றை வைத்து அதனருகில் மாதிரிப் பாம் பொன்றையும் வைத்தசாமியார் சமஸ்கிருத மந்திரங்களோதினார் பூசையின கடைசிக்கட்டமாகச் சரஸ்வதியின் வயிற்றில்இருந்த விசத்தை வெளியே எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார் அறையெங்கும் புகைகிளம்பியது சாமியாரின் மந்திரமும் அதிகரித்துக் கொண்டிருந்தது

முப்பது அங்குலநீள நூலை எடுத்தார் சாமியார் ஒருமுனையைச்சரஸ்வதியின்வாயில் வைத்தார்மறுமுனையைபால் செம்பில் நுழைத்தார் அவரது குரற்சத்தம் அதிகரித்துக்கொண்டிருந்தது சுலோகங்களை உச்சரித்த வண்ணம் இருந்தார் சுமார் அரைமணி நேரம் இப்படி நடந்தது சரஸ்வதியின் தலையில் சில மல்லிகைப்பூக்களை அள்ளி வீசினார் அடுத்து அந்த மாதிரிப் பாம்பை எடுத்து சரஸ்வதியின் தலையில்வைத்து பின்பு அதைப் பாற்செம்புக்குள் நுழைத்து எடுத்தார் இதையடுத்து பால் நீலநிறமாக மாற ஆரம்பித்தது சில வினாடிகளில் கருநீலநிறமாகியது.

சரஸ்வதியின் வயிற்றிலிருந்து விஷமெல்லாம் வெளியே வந்துவிட்டதென மகிழ்ச்சியுடன் கூறிய சாமியார் சரஸ்வதியின் தலையில் கை வைத்து ஆசீர்வாதம் செய்து இனிமேல் உனக்கு எதுவுமே நடக்காதென்றார் இதனையடுத்து நீலநிறமாக மாறிவிட்ட பாற்செம்பை திருமதி இராமநாதன் கையில்கொடுத்து வீட்டின் பின் கட்டில் குழிதோண்டி அப்படியே புதைத்துவிடும்படி உத்தரவிட்டார் சாமியாருக்கு ஐம்பதுரூபா சன்மானம் வழங்கப்பட்டது சாமியாரை பஸ் நிலையத்திற்கு அழைத்து வந்துவிட்ட கந்தசாமிஉடனே அடுத்தபஸ்ஸில் கல்கிசைக்கு வந்து என்னைச் சந்தித்து நடந்தவற்றைக் கூறினார்.

உண்மைவெளியானது

உடனே நான் புறப்பட்டு வெள்ளவத்தைக்குச் சென்று கந்தசாமியின் இல்லத்தை அடைந்தேன் நேரத்தைத் தாழ்த்தாது அந்த நீலநிறமான பாற்செம்பை வாங்கிய நான் இன்னொருபாத்திரத்தை எடுத்து அதில்பாலை ஊற்றினேன் அப்போது செம்பின் அடியில் இருமைவில்லைகள் தென்பட்டன அவற்றை எடுத்து இராமநாதன் தம்பதியருக்கும் கந்தசாமியாருக்கும் காட்டினேன் பால் எப்படி நீல நிறமாகியது என்பது அவர்களுக்குப்புரிந்து விட்டது. சாமியாரிடம் ஏமாந்து விட்டதை எண்ணி ஆத்திரம் கொண்டனர்.

அறியாமை உள்ளவர்களிடம் தான்இப்படியான சாமியார்கள் தங்கள் கைவரிசையைக் காட்டுகின்றார்கள் என்று கூறிவிட்டு நான் வீடு திரும்பினேன். அடுத்த நாள் ரகுபதியின் இராமநாதன் அந்தச்சாமியாரைக் கண்டுபிடித்து தாம்கொடுத்த ஐம்பது ரூபாவை வாங்கிவிட்டதாகக் கந்தசாமி என்னிடம் தெரிவித்தார் இந்த உலகில் ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்கள் ஏமாற்றிக் கொண்டேதான் இருப்பார்கள் என்பது இராமநாதன் தம்பதியர் கதையிலிருந்து மிகத்தெளிவாகிறது.

நன்றி; கோரஇரவுகள்

## மாதாந்த உதவிப்பணம்

(மந்திகை)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான ஏப்பிரல் மாதக் கொடுப்பனவுகள் புதுவருடத்தையொட்டி 10 ஆம் திகதிமுதல் வழங்கப்பட்டு வருகின்றன.

பொதுசன மாதாந்த உதவிப்பணம், புற்றுநோய் என்பவற்றுக்கான கொடுப்பனவுகளை தபால் உபதபால் நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாமென பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

(உ-23)

## இளைஞன்மீது வழியறித்துதாக்கு

(மந்திகை)

வீதியால் சென்றுகொண்டிருந்த இளைஞர் வழிமறித்துத்தாக்கப்பட்டதில் கடும் காயங்களுக்கு ஆளானநிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

கடந்த புதனன்று நெல்லியடியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் துன்னாலை வேம்படியைச் சேர்ந்த கி.பாலகிருஷ்ணன் (வயது23) என்பவரே படுகாயமடைந்துள்ளார். (உ-23)

## அடாவடித்தனங்கள் குடாநாட்டில் குறைவு

(ஈச்சமோட்டை)

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் அதிகரித்திருந்த அடாவடித்தனங்கள் குறையத் தொடங்கியுள்ளன.

சந்திகளில் கூடி நின்று கலாட்டா புரியும் 'கேம்' குறூப்புக்கள்தானாக அடங்கிவிட்டன. புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் யாழ். நகரினுள் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரவேசித்ததையடுத்தே இம் மாற்றம் நிகழ்ந்துள்ளது.

தற்போது இவ் இளைஞர்களின் பலர் நகரைச் சோடிப்பதிலும் புரட்சி கீதங்களை ஒலிக்க விடுவதிலும் கூடமும் முரமாக ஈடுபட்டுவருகினறனர் . என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.(உ-59)

## பிரயாணிகள் பஸ் சேவை பிரபாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையே யான பிரயாணிகள் பஸ் சேவையினை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளினை விரைவில் மேற்கொள்ள வேண்டும்.

இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் மேன்மவிஜயரத்னா விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்-

யாழ்ப்பாணத்துக்கும் கண்டிக்கும் இடையிலான தரைவழிப்பாதை கடந்த 8 ஆம் திகதி திறக்கப்பட்டதை அடுத்தே அவர் இவ்வேண்டுகோளினை விடுத்துள்ளார்.

இப்பாதையின் ஊடான போக்குவரத்துக்கு அனுமதியளிப்பதன் மூலம் மக்களின் சிரமங்களும் செலவினங்களும் குறைக்கப்படும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். (உ-8)

## வர்த்தகர்களுக்கான சந்திப்பு

(ய ழ்ப்பாணம்(

வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம், தீவகம் ஆகியபகுதிகளைச்சேர்ந்தவர்த்தகருடனான விடுதலைப்புலிகளின் அரசியற்பிரிவினரின் சந்திப்பு இன்று பி.ப 4மணிக்கு யாழ் வணிகர் கழகத்தில் இடம் பெறவுள்ளது. (உ)

சயாதானத்

இச் சந்திப்பு தொடர்பாக சிவசக்தி ஆனந்தன் எம்.பி மேலும்தெரிவிக்கையில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புபாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து பலமாகஇருக்க வேண்டியதன் அவசியத்தையும் திரு. வே. பிரபாகரன் வலியுறுத்தி இருந்தார் என்றும் குறிப்பிட்டார்.

தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எம்பிக்களுக்கு மிடையிலான சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் அரசியல்ஆலோசகர்அன்ரன்பாலசிங்கம், தமிழீழஅரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்செல்வன், பொட்டுஅம்மான் மற்றும் முக்கிய தளபதிகளும் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர் (வ)

### சமாதான முயற்சிகளை வலுவுள்ளதாக்க

# வடக்கு - தெற்கு வாழ் பொதுமக்கள் தியாக உணர்வுடன் பணியாற்ற வேண்டும்

### யாழ். பல்கலையில் வாசு தெரிவிப்பு

(தென்மராட்சி)

வடக்கு - கிழக்கில் ஜனநாயக பாரம்பரியங்கள் பேணப்படும்போது தான் தெற்கிலும் ஜனநாயகம் உயிரோட்டம் உள்ளதாக இருக்கும். மிகுந்த கடின உழைப்புக்கு மத்தியில் உருவாக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் நல்ல முறையில் அமுல் செய்யப்படவும் - சமாதான முயற்சிகள் ஆழம்பெறவும் வடக்கிலும் தெற்கிலும் உள்ள மக்கள் தியாக உணர்வுடன் பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு நவசமாஜக் கட்சியின் தலைவரும் பிரபல்யமிக்க இடதுசாரி அரசியல் வாதியுமான வாசுதேவ நாணயக்கார நேற்றையதினம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் குறிப்பிட்டார்.

பல்கலைக் கழகத்துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெற்றஇக் கலந்துரையாடலில் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், விரிவுரையாளர் க. சத்தியசீலன் மற்றும் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் பங்குபற்றியிருந்தனர்.

வாசுதேவ நாணயக்கார அங்கு மேலும் கருத்துரை வழங்குகையில்,

ஏ-9 பாதை திறக்கப்பட்டதும், அதனைக் கொண்டாடும் பொருட்டு அப்பாதை வழியாக நான் யாழ்ப்பாணம் வந்துள்ளேன். புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் யாழ்ப்பாண மக்களின் உணர்வலைகளை அறிவதே எனது பயணத்தின் நோக்கமாகும்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நல்ல சூழல் தோன்றியுள்ளது. இருப்பினும் இதனைக் குழப்புவதற்குப்பல இனவாத சக்திகளும், ஆயுத விற்பனையாளர்களும், மற்றும் படைகளில் இருக்கும் மேல் மட்டத்தினரும் மும்முரமாக இருக்கின்றனர்.

இதுவிடயத்தில் வடபகுதி தென்பகுதி மக்கள் நம்பிக்கையுடனும் பரஸ்பரத்துடனும் பணிபுரிந்து சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் பாடுபட வேண்டும்.

வடபகுதியில் மீனவர்களின் பிரச்சினைகள் பொருட்களின்விலையேற்றம், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, சிறைகளில் வாடும்தமிழ் இளைஞர்களின் விடுதலைபோன்ற விடயங்கள்பற்றி நான்தென்பகுதியில் உரிய தரப்பினருடன் பேசுவேன்.

நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டும் என்பதில் நோர்வே அரசு மிகவும் விசுவாசமாகச் செயல்படுகின்றது. அமெரிக்காவின்போக்கு சந்தேக முள்ளதாகவே உள்ளது. அதேவேளை இந்தியாவை நல்ல அயல் நண்பனாக வைத்திருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இவருடன் புதிய இடதுசாரி முன்னணி உறுப்பினர்களும், தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள் சிலரும் வருகை தந்திருந்தனர்.

(உ-77-19)

நீதிபதி இ.த. விக்னராஜாவின் தலையீட்டால்

# யா/சிறைச்சாலைக் கைதிகள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட சாகும் வரையிலான உண்ணாவிரதப்போராட்டம் நேற்று முன்தினம் கைவிடப்பட்டது.

யாழ். மாவட்ட நீதிபதி இ.த விக்னராஜாவுக்கு இவர்களின் உண்ணாவிரதப்போராட்டம் தொடர்பாக கிடைத்த தகவலையடுத்து, சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டு இதுவிடயம் தொடர்பாக கலந்துரையாடிய வேளை, சில உறுதியான தகவல்கள் வழங்கப்பட்டன.

இதனைத்தொடர்ந்து சிறைச்சாலைக்கு நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் விஜயம் செய்த நீதிபதி விக்னராஜா, கைதிகளுடன்நேரடியாகக் கலந்துரையாடி உண்மையை எடுத்து விளக்கியதன் பேரில் அவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடுவதாக அறிவித்தனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் என்பவற்றின் கீழ்தடுத்து வைக்கப்பட்டிருக்கும்தங்களை பிணையில் விடுதலை செய்ய வேண்டும் அல்லது தங்கள் மீதான வழக்குகளை தாக்கல் செய்து விசாரித்து விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கைதிகள் உண்ணாவிரதத்தில் குதித்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## பொங்குதமிழ் நிகழ்வில் விஷமிகள் நிதி மோசடி

### பல்கலைமாணவர்ஒன்றியத்தலைவர்எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வேறு மாவட்டங்களில்பொங்கு தமிழ் நிகழ்வின் பெயரால் சிலர் நிதி மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக அறிகிறோம். எனவே சந்தேகத்திற்கிடமானவர்கள் இவ் விடயம் சம்மந்தமாக நிதிசேகரித்தால் எமக்கு அறிவிக்கவும்

இவ்வாறு யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் த.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பொங்கு தமிழ் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் கட்டம் கட்டமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது தமிழ்மக்களின் வெளிப்பாடாகவே பொங்கு தமிழ் நிகழ்வு நடைபெற்று வருகின்றன அவர்கள் தாமாகவேமுன்வந்து பணஉதவி புரிந்துவருகின்றனர்.

சில விஷமிகள் வேறுமாவட்டங்களில் இதனைப் பயன்படுத்தி நிதிமோசடிகளில்ஈடுபட்டு வருவதாக தகவல் கிடைத்துள்ளது.

எனவே யாழ்ப்பாணத்தில் நிதிசேகரிக்கும் விடயத்தில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டுமென்று மேலும் அவர் தெரிவித்துள்ளார் (எ-19)

## போலி நாணயத்தாள் தயாரித்த மாணவன் கைது

(காலி)

காலி உயர்நிலைப் பாடசாலையொன்றில் கல்வி கற்று வரும் மாணவன் கள்ள நோட்டுக்களைஅச்சடித்தகாரணத்தால் அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளான்

அண்மையில் மாலையளவில் நுகொடவிலுள்ள புடைவை நிலையமொன்றில் ஆயிரம் ரூபா கள்ள நோட்டுத்தாளை மாற்றமுற்பட்டபோது மேற்படி மாணவன் அகப்பட்டுள்ளான்.

கொக்குவல பிரதேசத்தில் அமைந்துள்ளஇம்மாணவனது வீட்டை சோதனையிட்டபோது 15 ஆயிரம்ரூபா பெறுமதியான போலி ஆயிரம் ரூபா தாள்களைபொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை இம்மாணவனின் நண்பர்கள் இருவரும் போலி நாணயத் தாள்களை வெவ் வேறு இடங்களில் அச்சடித்து வருவதாக தகவல் கிடைத்துள்ளது எனவும் காலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரு பெரும் இனங்களிடையே

## இடைவெளி ஏற்பட ஊடகங்களே காரணம்

### சுனந்த தேசப்பிரிய

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அபிலாசைகள் பற்றியும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றியும் தென்னிலங்கைப் பெரும்பான்மையின மக்களுக்கு எடுத்துரைப்பேன். சாதாரண மக்களுக்கிடையிலான ஐக்கியத்தின் மூலமே சமாதானம் மலரும் என்று சுதந்திர ஊடகவியலாளர் சங்கத்தலைவர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு வாசுதேவ நாணயக்காராவுடன் விஜயம் செய்த சுனந்த தேசப்பிரிய தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

சிங்கள மக்கள் மத்தியில் சிங்கள ஊடகங்கள் இனவாதத்தையே போதிக்கின்றன இதனால் தான் இரு இன மக்களுக்குமிடையே பெரும் இடைவெளி உருவானது.

இன்னும், குறிப்பாக தமிழர்களின் அபிலாசை வெளிப்பாடான பொங்குதமிழ் பற்றி சில சிங்கள இனவாதக்கட்சிகளும் பல சிங்கள ஊடகங்களும் தவறான அபிப்பிராயங்களினைப் பரப்பி சிங்கள மக்கள்மத்தியிலே பீதியினை உண்டுபண்ணுகின்றன.

ஆனால் என்னைப் பொறுத்தவரை தமிழ்மக்களின் தேசியத்தன்மையைப் பிரதிபலிக்கும் எழுச்சி நிகழ்வான பொங்குதமிழ் அவசியமானதே,

எனவே சுதந்திர ஊடகவியலாளர் சங்கத்தைச் சேர்ந்த நாம் கூடியவரை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, அபிலாசைகளைப் பற்றிய உண்மையான கருத்துக்களை தென்னிலங்கை மக்கள் மத்தியிலே எடுத்துரைப்போம் என்று தெரிவித்தார். (உ-19)

## யாழ்ப்பாணம்போவோமா?

மக்களெல்லாம் யாழ்ப்பாணம் வரவேண்டும்
மகிழ்ச்சியுடன் புத்தாண்டு வாழ்த்த வேண்டும்
யுத்தமில்லாப் பூமியில் வாழ வேண்டும்
யுவசக்தி ஊரெல்லாம் வளர வேண்டும்

அச்சமில்லா வாழ்வு நமக்கு வேண்டும்
அறிவியல் கல்வியே எமக்கு வேண்டும்
பச்சை வயல் நிலங்கள் செழிக்க வேண்டும்
பஞ்சமில்லா வாழ்க்கை எல்லோர்க்கும் வேண்டும்

ஓலைக் குடில்களின் ஓலங்கள் நீங்க வேண்டும்
ஒவ்வொரு வீட்டிலும் இல்லாமை நீங்க வேண்டும்
காலைக் கதிரவன் போல் உழைக்க வேண்டும்
கண்ணீர்த் துளிகள் ஈழமெங்கும் மறையவேண்டும்

தமிழீழக்கவிராயர்

## இராசி பலன்

15-4-2002
(சித்திரை 2, திங்கள்)
திருதியை பி. இ. 5.04 வரை
பரணி காலை 7.33 வரை
ராகுகாலம்-7.34-9.04
நல்லநேரம்-12.04-1.34
கார்த்திகை விரதம்

**மேடம்**
காரியஜெயம். தெய்வ அனுகூலம், போசனசுகம், பெரியோர் ஆதரவு

**இடபம்**
சுபசெலவு, மனக்கிலேசம், குடும்பசுகம், முயற்சி தாமதம்

**மிதுனம்**
தொழில்சிந்தை, மன மகிழ்ச்சி, காரியநன்மை, பொருள்சேர்க்கை

**கடகம்**
சுபநிகழ்ச்சி பிறர்உதவி, தொழில் முன்னேற்றம், முயற்சிபலிதம்

**சிங்கம்**
அச்சமான நிலை, முயற்சி தாமதம், உடல்நலக்குறைவு, எதிர்பாராதநன்மை

**கன்னி**
உறவினர் மனஸ்தாபம், காரியதடங்கல், பிரயாண பயம், திருடர்பயம்

**துலாம்**
நல்ல வரவேற்பு, சென்ற காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, வாகனவசதி

**விருச்சிகம்**
காரிய அனுகூலம், திடீர் பயணம், சுவாரஸ்யம், ஆரோக்கியம்

**தனுசு**
தாழ்ந்த சுபாவம், காரிய தாமதம், திடீர்நன்மை, உறவினர் மனஸ்தாபம்

**மகரம்**
ரோகபயம், விரும்பாதோர் உறவு, முயற்சிதாமதம், தொழில்கஷ்டம்

**கும்பம்**
காரியநன்மை, குடும்ப மகிழ்ச்சி, தனவரவு, வாக்கு மேன்மை

**மீனம்**
மதிப்புக்குறைவு, சகோதரர் உதவி, காரியதாமதம், வீண் விவாதம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது).

வளவன்

ஆடை உற்பத்தி துறையை மேம்படுத்த

## உயர்மட்ட தூதுக்குழு அமெரிக்கா செல்கை

(கொழும்பு)

இலங்கையின் ஆடை உற்பத்தித் துறையினை மேம்படுத்தும் நோக்குடனும், சுதந்திர வர்த்தக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் வகையில், உயர்மட்ட தூதுக்குழுவொன்று அமெரிக்காவுக்குச் சென்றுள்ளது.

பேராசிரியர் ஜி. எல் .பீரிஸ் தலைமையிலான இக்குழுவில், வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கா, கைத்தொழில் கொள்கைகள் முதலீட்டு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ரஞ்சித் பொனாண்டோ, கைத்தொழில் அதிபர் மலிக் சமரவிக்கிரம ஆகியோர் அடங்கியுள்ளனர்.

இக்குழுவினர், அமெரிக்க செனட்டர்கள், கைத்தொழில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் சந்தைவாய்ப்புகள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உத்தேசவர்த்தக சுதந்திர உடன்படிக்கைக்கு அமைவாக இவ்விருநாடுகளும் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்களின் மீது வரித்தடுப்பை ஏற்படுத்த முயன்றுவருகின்றன.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஆடைகளில் 60 சதவீதமானவை அமெரிக்காவுக்கே ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதுடன், கடந்த ஆண்டில் 100கோடி டொலர் பெறுமதியான ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## யாழ். பொது நூலகம் பிரதமர் திறந்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

கட்டடத் திருத்த வேலைகள் பூர்த்தியடையும் நிலையிலுள்ள யாழ்ப்பாண பொது நூலகம் பிரதமர் ரணில் விக்ரமசிங்காவினால் திறந்து வைக்கப்படவுள்ளதாக அறியப்படுகிறது.

பெரும்பாலும் இத்திறப்பு விழா மே 20 ஆம் திகதி இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நூலகத்திற்குத் தேவையான ஒரு தொகுதி நூல்கள் கடந்த 8 ஆம் திகதி யாழ். மாநகர சபைக்கு வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை, யாழ். நகரிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தை வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா மே மாதம் 31 ஆம் திகதி திறந்து வைப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-19)

உதைபந்தாட்டப் போட்டியில்

## சென். பீற்றர்ஸ் கல்லூரி அணி வெற்றியீட்டியது

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணிக்கும் யாழ். மத்திய கல்லூரி அணிக்குமிடையில் நேற்று முன்தினம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சென்பீற்றர்ஸ் கல்லூரி அணி வெற்றியீட்டியது.

போட்டி ஆரம்பமாகி 20 நிமிடங்களில் சென் பீற்றஸ் அணி முதலாவது கோலை போட்டதும் இதனையடுத்து ஆட்டம் விறுவிறுப்பாக இடம்பெற்ற போதும் எந்தவொரு அணியும் கோல் போடவில்லை.

இந்தப் போட்டியில் நடுவர்களாக கே. விமல்ராஜ், எஸ். யூட்மன், ரி. றெட்சன் எம். பிரான்சிஸ் ஆகியோர் கடமையாற்றினர். இதற்குமுன்னர் சென் பற்றிக்ஸ் அணி மற்றும் சென் ஹென்றீஸ் அணிகளுடன் சென் பீற்றஸ் அணி விளையாடிய போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன

யாழ். மத்திய கல்லூரி அணியுடனான போட்டியில் சென் பீற்றஸ் அணி வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-110)

## தீயணைப்பு இயந்திரம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவிற்கு, தீயணைப்பு இயந்திரம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தீயணைப்புப் பிரிவில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதும் குறிப்பிடத்தக்கது. (உ-247)

### இயற்கை வளம் அரிதாகிறது

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் ஆட்கள் இல்லாத காணிகளில் நிற்கும் பயன்தரும் மரங்கள் சட்டவிரோதமாகத் தறிக்கப்படுவது அதிகரித்து வருகின்றது.

இத்தகைய சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர் தந்திரமாக வீதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்று வலிகாமம் வடமராட்சி பகுதிகளுக்கு வாகனங்களில் இவற்றை எடுத்துச் செல்கின்றனர்.

இதன்காரணமாக தென்மராட்சியில் சூழல் வளம் மிகவும் மோசமான முறையில் அரிதாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-27)

### பாராட்டிப் பட்டம்

(தென்மராட்சி)

பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவரான க. நடராஜாவின் சேவைகளைப் பாராட்டி, பனை அபிவிருத்திச் சபையின் தற்போதையதலைவர் பொ. சிவபாதம் பொன்னாடை போர்த்தி 'கற்பகம்' 'நடராஜா' என்னும் பட்டப் பெயரை சூட்டியுள்ளார். (உ-77)

### மாவைத்தின்ற குழந்தை மருத்துவமனையில்

(நவக்கிரி)

பலகாரத்திற்கு குழைத்து வைத்த மாவை 4 வயதுக் குழந்தை அள்ளித்தின்றதில் தொண்டையில் அடைத்து மூச்சுத்திணறி ஆபத்தான நிலையில் பெற்றோர் மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றனர். அச்சுவேலிதோப்பில் அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பலகாரத்திற்கு குழைத்த மாவை அள்ளித்தின்ற ஜெ. ஜான்சி என்ற மேற்படி குழந்தைக்கு அச்சுவேலி மருத்துவமனையில் முதலில் சிகிச்சை அளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக இப்போது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-233)

## இன்று ஒரு தகவல்

# தகவல் ஜோசியம் எது?

என்ன? இன்று ஒரு தகவல் கேட்பதற்கு எல்லோரும் தயாராக இருக்கிறீர்களா? எதற்கு இப்படிக் கேட்கிறேன் என்றால்... இதுவரையும் உங்களுக்குத் தகவல் தானே சொல்லிக் கொண்டிருந்தேன். இன்றைக்கு உங்களுக்கும் ஜோசியம் சொல்லப் போகிறேன். நிஜமாகத்தான் நாடி ஜோசியம், ரேகை ஜோசியம், மாதிரி இது தகவல் ஜோசியம் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

இதில் நம்பிக்கை உள்ளவர் மட்டும் கொஞ்சம் முன்னால் வந்து ரேடியோவுக்கு முன்னால் உட்காருங்கள். உற்றுப் பாருங்கள். நான் இங்கே இருந்தபடியே உங்கள் முகத்தைப் பார்த்து பலன் சொல்லப்போகிறேன். கவனமாகக் கேளுங்கள்... நான் சொல்வதெல்லாம் உங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறதா என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். பலன் சரியாக இருந்தால் ஒரு வரி எழுதிப் போடுங்கள். என்ன தயாரா? இதோ ஆரம்பிக்கிறேன்.

நீங்கள் எப்படியென்றால்.. அடுத்தவர்கள் உங்களை விரும்பவேண்டும், பாராட்ட வேண்டும் என்கின்ற தேவை உங்களுக்கு அதிகமாக இருக்கிறது. நீங்கள் உங்களிடமிருக்கிற நல்லது கெட்டதை அடிக்கடி நினைத்துப் பார்க்கிறீர்கள். அப்படிச் சுயமாக விமர்சனம் செய்கின்ற தன்மை உங்களுக்கு உண்டு. உங்களிடம் இருக்கிற திறமைகளில் பலவற்றை நீங்கள் பயன்படுத்தி நன்மையடையாமல் வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்! என்ன சரிதானா? உங்களுடைய ஆளுமையில்... உடல் தோற்றத்திலே பல குறைகள் இருந்தாற்கூட பொதுவாக நீங்கள் அவற்றுக்கெல்லாம் வேறு வகையில் ஈடுசெய்து விடுகிறீர்கள்.

வெளித்தோற்றத்துக்கு நீங்கள் ஒழுங்கு, கட்டுப்பாடு உள்ளவராகத் தெரிகிறீர்கள். இருந்தாலும் உள்மனது அப்படி இல்லை... பாதுகாப்பு இல்லை என்கிற உணர்ச்சி இருக்கிறது... சஞ்சலம் இருக்கிறது. அடிக்கடி உங்களுடைய முடிவுகளும்செயல்களும் சரியானவை தானா என்கிற சந்தேகம் உங்களுக்குத் தீவிரமாக ஏற்படுவது உண்டு. நீங்கள் ஓரளவுக்கு மாற்றமும்-புதுமையும் ஏற்பட வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள். கட்டுப்பாடுகளும், தட்டுப்பாடுகளும் உங்களை அடக்கி வைக்கிற போது உங்களுக்கு அதிருப்தி உண்டாகிறது. நாம் சுயேச்சையாகச் சிந்திக்கக்கூடியவர்கள் என்கிற நினைப்பு உங்களுக்கு உண்டு. மற்றவர்கள் சொல்வதை சரியான ஆதாரமில்லாமல் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள், மற்றவர்களிடம் நமமைப் பற்றி அளவுக்கு மீறி வெளிப்படையாகப் பேசுவது புத்திசாலித்தனமில்லை என்பதை நீங்கள் புரிந்து வைத்திருக்கிறீர்கள்.

நடைமுறை சாத்தியமில்லாத சில ஆசைகள் உங்களிடம் உண்டு. சுயபாதுகாப்பு என்பது உங்களுடைய முக்கியமான இலட்சியங்களில் ஒன்று. சில சமயம் நீங்கள், மற்றவர்கள் உங்களிடம் வந்து சகஜமாகப் பழகக்கூடிய அளவுக்கு நடந்துகொள்கிறீர்கள். சில சமயம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கிறீர்கள தயங்குகிறீர்கள் ஒதுங்கிப்போய் விடுகிறீர்கள்.

என்ன இது வரையும் நான் சொல்லிக் கொண்டு வந்த ஜோசியம் எப்படி? உங்களுக்கு ஒத்து வருகிறதா? அப்படி ஒத்து வருகிறதென்றால் உடனே என்னை பாராட்ட ஆரம்பித்து விடாதீர்கள். நீங்கள் பாராட்ட வேண்டியது றோஸ் ஸ்ராக்கினரை அவர் ஒரு மனோ தத்துவ நிபுணர். அவர் அமெரிக்காவில் ஒரு உளவியல் சோதனை நடத்தினார். அந்த அடிப்படையில் தான் நான் இப்போது உங்களுக்குப் பயன் சொன்னேன். எனக்குச் ஜோசியமும் தெரியாது-ஒன்றும் தெரியாது.

விஷயம் என்ன தெரியுமா; பொதுவாக மனிதர்கள் பாராட்டுகளை விரும்புவார்கள் விமர்சனங்களை வெறுப்பார்கள். இதைமனதில் வைத்துக் கொண்டு பலன் சொல்ல வேண்டும். அவ்வளவு தான் நாம் சொல்வதில் பெருமளவு சாதகமானதாகவும், லேசாக விமர்சிக்கிறமாதிரியும் இருக்க வேண்டும். மக்கள் நம்பி விடுவார்கள்.

ஒருவரை கருமி என்று சொல்வதை விட சிக்கனமானவர் என்று சொன்னால்... அவர் ஏற்றுக்கொள்வார். அவர் ஊதாரியாக இருந்தால் பெரிய செலவாளிதான் இருந்தாலும் நல்ல விஷயங்களுக்குத்தான் செலவழிப்பீர்கள் என்று சொல்லவேண்டும்.

சொல்கிற பலன்கள் பொதுப்படையானவை தான் இருந்தாலும் அவைகள் தனக்கு மட்டுமே உரியவையாக கண்டுபிடிக்கப்பட்டவை என்கிற பிரமையைகேட்கின்றவர்களுக்கு உண்டாக்க வேண்டும். அதுதான் ஜோசியரின் சாமர்த்தியம். இந்தப் பிரமைக்கு உளவியலாளர் 'பார்ணம் உத்தி' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

பீனியஸ் பார்ணம் என்று ஒருவர் 19 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் மிகப் பிரபலமாகவிருந்த ஒரு சர்க்கஸ் கம்பெனியின் அதிபர். உலகத்திலே ஒவ்வொரு நிமிஷமும் ஓர் ஏமாளி பிறந்து கொண்டேயிருக்கிறான் என்கிறது அவருடைய சித்தாந்தம். ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்துகிற அம்சங்களை கொஞ்சம் கொஞ்சமாக கலந்து கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்தியது தான் அவருடைய மகத்தான வெற்றிக்குக் காரணமாம்.

அந்த உத்தியை அடிப்படையாக வைத்துத்தான் இன்றைக்குப் பலர் இந்த உலகத்தில் ஒவ்வொரு கூட்டத்தைக் கூட்டிக்கொண்டு பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த ஒரு சாமியாருக்கு ஏகப்பட்ட தொண்டர்கள். பலர் அவரிடம் வந்து அருள் வாக்கு கேட்பார்கள். அவரும் சொல்வார் ஒருநாள் ஒரு அம்மா கவலையோடு அவர் முன்னால் வந்து நின்றார். இவர் அவரைப் பார்த்தவுடன் அம்மா கவலைப் படாதே சொல்லாமல் புறப்பட்டுப் போன உன் வீட்டுக்காரன் சொல்லாமலே ஒரு நாள் வந்து சேர்வான். தைரியமாக இரு என்று ஆசீர்வாதம் பண்ணினார். அந்த அம்மா போனவுடனே அவருடைய சீடன் அவரிடம்வந்து 'அது எப்படி சுவாமி. அந்த அம்மாவின் வீட்டுக்காரன் சொல்லாமல் போய்விட்டான். என்கிற விபரத்தை அவ்வளவு சரியாகக் கண்டுபிடித்தீர்கள்'? என்று கேட்டான். அவளுடைய தொந்தரவு தாங்க முடியாமல் தலைமறைவாக ஆகிவிட்ட அந்த அப்பாவி நான் தானப்பா என்றார் அவர். ●

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தற்போதைய யுத்த நிறுத்தம் நீடிக்க இறை அருளை இறைஞ்சுவோம்

## வட-பிராந்திய இந்துப் பேரவை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனுக்கும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து உருவாகிய நிரந்தர யுத்த நிறுத்தம் நீடித்து நிலையான சமாதானம் ஏற்பட நாம் அனைவரும் பிரார்த்திப் போமாக.

புதுவருடத்தை ஒட்டி வட பிராந்திய இந்துப் பேரவை விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது அமைதி நிலையை ஏற்படுத்திய தலைவர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் சுபீட்சம் ஏற்பட இறை அருளை பிரார்த்திப் போமாக.

விடுதலைப் புலிகள்மீதான தடைகள் நீங்கி வடக்கு-கிழக்கு இணைந்ததான தமிழ் பேசும் மக்களுடைய சுய நிர்ணய உரிமையுடன் கூடிய தான அரசியல் தீர்வு மூலம் சமாதானம் எட்டப்பட வாழ்த்துகின்றோம்.

இந்துக்களின் வழிபாட்டு தெய்வமாகக் கருதப்படும் பசுவதை உடன் நிறுத்தப்படவும், வடக்கு- கிழக்கின் சேதமடைந்த வழிபாட்டு தலங்கள் மீளவும் புனரமைக்கப்பட்டு பூசைகள் ஆரம்பிக்கப் படவும் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமரவும் இறைஅருளை இறைஞ்சுகிறோம்.

இந்தியாவுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான கசப்புணர்வுகள் நீங்கி பரஸ்பர ஒற்றுமைகள் வலுப்பெறவும் மனிதர்களிடையே குரோதங்கள், விரிசல்கள் நீங்கி பரஸ்பரம் ஒற்றுமைகள் மலர்ந்து ஜீவகாருண்யம் மிக்க பண்பான சமுதாயம் உருவாக புத்தாண்டு வழி வகுக்கட்டும்.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

வலி-கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை மேற்படி பிரதேச சபை அலுவலர்களினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக செயலாளர் செ.குகதாசன் தெரிவித்துள்ளார்.

இன்று 15 ஆம் திகதி காலை 9.00-10.00 மணிவரை கோப்பாய் மத்தி. வெள்ளெருவைப்பிள்ளையார் சனசமூக நிலையத்தில் 10.00 மணி தொடக்கம் 11.30 மணி வரை கோப்பாய் மத்திய பத்திர காளி அம்பாள் சன சமூக நிலையத்திலும் 12.00-1.00 மணிவரை கோப்பாய் மத்தி வள்ளியம்மன் சன சமூகநிலையத்திலும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நிகழ்வும் இடம்பெற உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (க)

## நாட்டில்சமாதானம்மலரும் புலிகள் அதீத நம்பிக்கை

(மட்டக்களப்பு)

அரசும்- விடுதலைப்புலிகளும் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் இடம் பெற்று வருகின்ற நிகழ்வுகளை அவதானிக்கும் போது நாட்டில் நிரந்தர சமாதானம் நிச்சயம் ஏற்படுமென்று தாம் நம்புவதாக விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்டஅரசியல் துறைப் பொறுப்பாளர் விசு தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம்அக்கரைப்பற்றில் தமது அரசியல் அலுவலகத்தைத் திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் அடிப்படையாக அமைந்துள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் நாம் எமது அரசியல் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர், இடம் பெற்றுவருகின்ற நிகழ்வுகள் நாட்டில் சமாதானம் ஏற்படுமென்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என்றுகூறினார். (த)

## இலவச ஆயுர்வேத சிகிச்சை நிலையம்

(ஈச்சமோட்டை)

பளைப் பிரதேச சபையினரால் மீசாலை புத்தூர்ச் சந்திக்கு அண்மையில் கடந்த புதனன்று இலவச ஆயுர்வேத சிகிச்சை நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டது.

இவ் ஆயுர்வேத சிகிச்சை நிலையம் திறக்கப்பட்டிருப்பது இப்பகுதி மக்களின் வைத்திய வசதியை அதிகரித்திருப்பதோடு வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு பெரும் பயன் அளிக்கும் எனவும் எதிர் பார்க்கப் படுகின்றது. (உ-79)

## அல்லைப்பிட்டியில் படையினரின் தொல்லை எல்லையின்றி தொடர்கிறது

(நெடுந்தீவு)

யாழ். நகரில் இருந்து தீவகத்துக்கு செல்லும் பிரயாணிகளும் தீவகத்தில் இருந்து யாழ். வரும் பிரயாணிகளும் அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் தீவிர பரிசோதனைக்குட்படுத்துவது மட்டுமன்றி 100 மீற்றர் தூரத்துக்கும் அதிகமாக பிரயாணிகள் இறங்கிச் செல்ல வேண்டிய கட்டாயம் தொடர்கிறது.

புரிந்துணர்வுஒப்பந்தம்சமாதானத்திற்கான அடிப்படையாகஅமைந்தும் அல்லைப்பிட்டியில் கெடுபிடிகள் அதிகரிக்கப்படுவது தீவக மக்களின் மனங்களை அதிருப்திப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. (உ-82)

## சிரமதானம்

(நெடுந்தீவு)

100 நாள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் நெடுந்தீவுமாவட்ட வைத்திய சாலையில் கடந்த 9ஆம் திகதி சிரமதானநிகழ்வு இடம் பெற்றது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சேர்ந்தசமுர்த்திஉத்தியோகத்தர்களின் நெறிப்படுத்தலின் கீழ் இடம்பெற்ற இச் சிரமதானத்திற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கிராம சேவையாளர்கள் பொதுமக்கள் போன்றோர் பங்களிப்பை வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-82)

## நிர்வாகக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

திரைக்கலைச் சங்கங்களின் சம்மேளனமான 'சலனசித்திரம்' அமைப்பின் யாழ். மாவட்ட நிர்வாகக் குழுக் கூட்டம் இன்று பி. ப. 4.30 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக மாவட்ட பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார். (உ-106)

## எரிபொருள் விற்பனை நிலையம்

(கல்வயல்)

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையம் மீண்டும் பழைய இடத்தில் இயங்கி வருகின்றது.

இதனால் மீளக்குடியமர்ந்த விவசாயிகள் பெரிதும் நன்மையடைந்து வருகின்றனர். (உ-111)

## படகுச் சேவை இடைநிறுத்தமில்லை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையிலானகுமுதினிபடகுச் சேவை எந்தக்காரணம் கொண்டும் இடைநிறுத்தப் படாதென அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-19)

## சிந்னைக்கு விருந்து

### எழுச்சி விழா வேண்டியதே ஆனால்.. ?

எந்தமிழ்த்தாய் மேன்மைகளை எடுத்துச் சொல்ல
எழுச்சிவிழா பலவேண்டும் மறுத்தற் கில்லை
வந்தனைக்கும் வாழ்விக்கும் வள்ளன் மைக்கும்
மாட்சிக்கும் உரியாளை வணங்கு கின்றோம்
இந்தஅள வாயிருத்தல் போதா தின்னும்
எத்தனையோ துறைகளிலே வளர்ச்சி ஈந்து
பந்தமுடன் அன்னையினைப் பேணல் வேண்டும்
பற்றுறுதி யுடன்பாடு படலும் வேண்டும்.

- பழையவன்

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வழங்க வேண்டும்

## வெளிநாட்டு ராஜதந்திரிகளிடம் வலியுறுத்து

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள ஒவ் வொரு குடும்பத்துக்கும் மீளக் குடியமர்வுக் கொடுப்பனவாக தலா 50 ஆயிரம் ரூபாவழங்கப்பட வேண்டும். சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

வணிகர் மன்றத்தின் தலைவர் பி.என். சற்குணராஜா செயலாளர் டாக்டர். எஸ். எஸ். அருளானந்தம் ஆகியோரால் கையொப்பமிட்டு அனுப்பிவைக்கப்பட்ட அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

● தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்தத்தின் போது தமது வர்த்தக நடவடிக்கைகளை இழந்துள்ள வர்த்தகர்கள், வர்த்தகத்தை மீண்டும் ஆரம்பிக்க உதவும்பொருட்டு ஆகக் குறைந்தது 5 இலட்சம் ரூபாவை இலகு கடனாக வழங்குதல் வேண்டும்.

● பெண்கள் தலைமைத்துவத்தினை ஏற்றுள்ள குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டினை உயர்த்தும் பொருட்டு அக்குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குதல் வேண்டும்.

● வீடுகளைஇழந்துள்ளகுடும்பங்களுக்கு அவற்றினை திருத்தம் செய்வதற்காக 3 லட்சம் ரூபாவை வழங்கவேண்டும்.

● யுத்தத்தினால் சேரழிக்கப்பட்ட சாவகச்சேரி நகரை நவீனத்துவ முறையில் புனரமைப்புச் செய்தல் வேண்டும்.

● தென்மராட்சிப் பிரதேச விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை மீளவும் ஆரம்பிக்க உதவும் பொருட்டு விதைகள். விவசாய உபகரணங்கள், கால் நடைகள் போன்றவற்றினை வழங்குதல் வேண்டும்.

● மீனவக்குடும்பங்கள்மீன் பிடித்தொழிலில்ஈடுபடுவதற்கு வழியாக மீன் பிடிவலைகள மற்றும் வேண்டிய உபகரணங்களை வழங்கவேண்டும்.

● யுத்தத்தினால் சேதமடைந்த பாடசாலைகள், மற்றும்நூலகங்களைப் புனரமைத்தல் வேண்டும்.

இம் மகஜரின் பிரதிகள் பிரிட்டன், ஜேர்மனி பிரான்ஸ், இந்தியா, அமெரிக்கா உட்பட மேலும் பல நாடுகளின் ராஜதந்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

(உ-77)

## இன்று புத்தாண்டு விழா

வட- பிராந்திய இந்துப் பேரவையின் புத்தாண்டு விழா இன்று திங்கள் பிற்பகல் 3. 30 மணியளவில் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையில் சாயி சமித்திக்கு அருகாமையில் இடம்பெறும்.

சு. நிந்தியானந்தன் தலைமையில் இடம்பெறும் மேற்படி நிகழ்வில் மதகுருமார், சமயப் பெரியார்களின் உரைகளும் இடம்பெறஉள்ளன.

(க)

## தென்மராட்சிப்பாடசாலைகளின்புனரமைப்புக்குவேண்டிய 300 மில்லியன் நிதியைப் பெறும் வழியறியாது

# கல்வித் திணைக்கள அதிகாரிகள் திண்டாட்டம்

(தென்மராட்சி)

யுத்தத்தின் காரணமாக தென்மராட்சியில் சேதமடைந்த பாடசாலைகளின் திருத்த வேலைகளுக்கென சுமார் 300 மில்லியன் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஆயினும் இந்தநிதியை எங்கிருந்து பெறுவது என தெரியாத நிலையில் திணைக்கள அதிகாரிகள் திண்டாடி வருகின்றனர்.

அதேவேளை, தென்மராட்சியில் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு நிதியுதவி வழங்கும்படி புனர்வாழ்வு அமைச்சிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளதாகவும் அறியப் படுகின்றது.

இது இவ்வாறிருக்க தென்மராட்சியில் மீளவும் ஆரம்பித்துள்ள பாடசாலைகளில் பயில்கின்ற மாணவர்களுக்குப் போதிய தளபாடவசதிகள் இல்லாமல் இருப்பதும், அத்துடன்,ஆரம்பித்தபாடசாலைகளில் இருக்கின்ற கிணறுகள் பூரணமாகத் துப்பரவு செய்யாமையினால் குடி நீருக்கும் பிரச்சினையாக இருப்பது தெரிந்ததே,

மேற்படி பாடசாலைகளில் கல்வி புகட்டுவதற்கான ஆசிரியர்களுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

(உ-77)

## மின்னல் தாக்கி இருவர் பலி

(அநுராதபுரம்)

அநுராதபுரம் பகுதியில் வயல் வேலைகளில்ஈடு பட்டுக் கொண்டிருந்த இருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் காயமடைந்த மூவர் அநுராதபுரம் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் ஒருவர் இளம் பெண் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## கரையோரப் பகுதியில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

இலங்கையில் இருந்து வெளி நாடுகளிற்கு சட்டவிரோதமாக செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

காலியில் இருந்து சிலாபம் வரையிலான கரையோரப் பகுதியிலேயே இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஆட்கடத்தல் காரர்கள் இந்தப்பகுதியின் ஊடாக இத்தாலி அவுஸ்ரேலியா போன்ற நாடுகளிற்கு சட்டவிரோத குடியேற்ற வாசிகளை அழைத்துச் செல்வதாகவும், எனவே இந்தப் பகுதிக்கான பாதுகாப்பில் கடற்படை ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-5)

# ஜெருசலேமில் தற்கொலைக்குண்டு தாக்குதலில் 6 இஸ்ரேலியர் பலி

(ஜெருசலேம்)

ஜெருசலேத்தில் அண்மையில் இடம்பெற்ற தற்கொலைக்குண்டுத் தாக்குதலில் 6 இஸ்ரேலியர்கள் பலியானதுடன் 9 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதனை அடுத்து. மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பாக பேச்சு நடத்த பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தை சந்திக்க இருந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜெனரல் கொலின் பவல் தனது பயணத்தைபாதுகாப்புக்கருதி ஒத்திவைத்துள்ளார்.

இதனிடையே, றமழாவில் முற்றுகையில் வைக்கப்பட்டுள்ள யஸீர் அரபாத், இது பற்றி மௌனம் சாதித்து வருகிறார்.

இது போன்ற தாக்குதல்களுக்கு பலஸ்தீன அதிபரே காரணம் என்று புஷ் அரசு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாயன்றுசெரல் அவிவ் பகுதியில் இடம்பெற்ற பஸ் குண்டுவெடிப்பில் 6 பேர் பலியானதுடன், 50 பேர் படுகாயமடைந்தமைதெரிந்ததே.

(உ-7)

## கார்ஓட்டிய 8வயதுசிறுவன் பாடசாலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டான்

(வாஷிங்டன்)

அனுமதி இன்றி கார் ஓடியதால் எட்டுவயது மாணவன பாடசாலையில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளான்.

அமெரிக்காவின்புளோரிடா மாநிலத்தில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது களவாடப்பட்டு இடைநடுவில் விட்டுச்சென்ற காரை 8வயதுடைய சிறுவன் சுமார் ஒன்றரை கிலோமீற்றர் தூரத்தில் உள்ளதனது பாடசாலைக்கு ஓட்டிச்சென்றுள்ளார்.

சாரதியின் இருப்பிடத்தில் நின்றபடியே காரை இச்சிறுவன் ஒன்றரைக்கிலோ மீற்றர் தூரம் ஓட்டிச் சென்றது அதிசயமாக இருந்தாலும் அது தண்டிக்கப்பட வேண்டும் எனக்கூறி இரண்டு மதங்கள் மாணவனை பாடசாலை இடைநிறுத்தி வைத்துள்ளது. (உ-7)

## இஸ்ரேல் படைகள் வெளியேறும்வேளையில் அழிவுவேலைகளில் ஈடுபாடு

(ஜெருசலேம்)

மத்தியகிழக்கு பலஸ்தீனப் பகுதியில் இருந்து இஸ்ரேலியர் பகுதி பகுதியாக வெளியேறும் அதே வேளை,பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தின் அலுவலகத்தை சூழவுள்ள கட்டங்களைக் தகர்த்து வருவதாக பலஸ்தீன திகாரிகள் கண்டனம்தெரிவித்துள்ளனர்.

சர்வதேச அழுத்தங்களை அடுத்து பலஸ்தீன பகுதிகளில் நிலை கொண்டுள்ள இஸ்ரேலிர்கள் வெளி யேறிவருவதை தாம் முழுமனதுடன் வரவேற்பதாகவும்.

பலஸ்தீனவரலாற்றுமுக்கியம் வாய்ந்த இடங்களை அவர்கள் தகர்த்து வருவதைதாம் கண்டிப்பதாகவும் பலஸ்தீன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இஸ்ரேலியர்கள் பலஸ்தீன கட்டங்களை புல்டோசர் மற்றும் குண்டுகள் மூலம் தகர்த்துவருவதை வெளிநாட்டு தொலைக்காட்சிகள் ஒளிபரப்பி வருகின்றதும் குறிப்பிடத்தக்கது

## நகை அடகு சேவை விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் நகை அடைவு பிடிக்கும் சேவை 17ஆம் திகதி புதன்கிழமை முதல் யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கிளை, கன்னாதிட்டிக்கிளை, பல்கலைக்கழகக்கிளை, பருத்தித்துறைகிளை ஆகியவற்றிற்கு விஸ்தரிக்கப்படவுள்ளது. (உ-3)

## மின்சார விநியோகம்

(கல்வயல்)

தென்மராட்சிப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளதையடுத்து,அப்பகுதிக்கான மின்சாரம் வழங்கும் பணிகள் துரித கதியில் இடம் பெற்று வருகின்றன. (உ-111

## கதிர்காமத்தில் இருந்து யாழ். வரை பாதயாத்திரை

(கொழும்பு)

தமிழ்-சிங்களமக்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டுஇம் மாதம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கதிர்காமத்திலிருந்து யாழ்ப்பாணம்வரை பாதயாத்திரை மேற்கொள்ளவுள்ளனர்.

சர்வ மதத்தவர்களினால் மேற்கொள்ளப்படும் இந்தப் பாதயாத்திரையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துவைக்கவுள்ளார். பாதயாத்திரைஆரம்பித்து20 நாட்களின்பின்இவர்கள் யாழ்ப்பாணம் வந்து சேருவர் என தெரிவிக்கப்படுகிறது.

## இடம் பெயர்ந்தோர் பற்றிய கணிப்பீடு

(கொழும்பு)

உள்ளூரில் இடம் பெயர்ந்துள்ள வர்கள் பற்றியகணிப்பீடு யாழ்ப்பாணம் வவுனியா மாவட்டங்ளிகல் நடைபெறவுள்ளதாகஅமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இவ்விடங்களில் கணிப்பீடு மேற்கொள்வதற்குவிடுதலைப் புலிகளும் ஏனைய தொண்டர் நிறுவனங்களும்பூரண ஆதரவு வழங்கி உள்ளதாகவும்,தென் பகுதியில் இடம்பெயர்ந்தவர்கள் பற்றிய கணிப்பீடு இன்னும் சிலவாரங்களில் நடைபெறவுள்ள தாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(எ-5)

## குஜராத் முதல்வரின் இராஜினாமா கடிதத்தை மத்திய அரசு நிராகரிப்பு

(அயோத்தி)

குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மூர்த்தி கையளித்த இராஜினாமாக் கடிதத்தை மத்திய அரசு நிராகரித்துள்ளது.

கோவாவில் நடைபெற்ற முக்கிய கூட்ட மொன்றில் முதலமைச்சரின் கடிதத்தை நிராகரிப்பது என கட்சி தீர்மானம் எடுத்துள்ளது என அதன் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மதக்கலவரம் தொடர்பாக கட்சிகளிற்கிடையே ஏற்பட்ட சர்ச்சையினை அடுத்தேமுதல்வர் இராஜினாமா செய்யும் முடிவை எடுத்திருந்தார்.

குஜராத் மாநிலத்தில் மதக்கலவரம் நடைபெற்ற போது முதலமைச்சர் முறைகளை சரியாக கட்டுப்படுத்த தவறிவிட்டார் என அதன் கூட்டணிக் கட்சிகளும் குற்றம் சாட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-8)

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.
- குறள்

வலம்புரி

## பிரபாவின் அழைப்பு

யாழ்மாவட்டத்திலும், வன்னியிலும் இருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீளக் குடியமர வருமாறு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த 12 வருடங்களுக்கு முன்னர் யாழ் மாவட்டத்திலிருந்தும், வன்னிப் பகுதியிலிருந்தும் முஸ்லிம் மக்கள் இடம் பெயர்ந்திருந்தனர். இவ் விடப்பெயர்வு தூரதிஷ்டமான ஓர் சம்பவம். முஸ்லிம்களின் இடம் பெயர்வு நியாயமானது என்ற கருத்து தமிழ் மக்களிடம் ஒரு போதும் இருந்ததில்லை. மாறாக தமிழ் மக்கள் தாம் இடம் பெயர்ந்திருந்தாலும் இடம் பெயர்ந்த முஸ்லிம்களுக்காக கழிவிரக்கப் படடதுண்டு.

எனினும் அன்றைய இடம்பெயர்வு நிரந்தரமானதல்ல அரசியல் சூழ் நிலையில் ஏற்பட்ட ஓர் நிலைமாற்றம் என்பதனை தலைவர் பிரபாகரன் அவர்கள் விடுத்த அழைப்பு தெளிவுபடுத்தியுள்ளது.

இடம் பெயர்ந்த முஸ்லிமகளைப் பொறுத்தவரை அவர்களின் தாயகம்தமிழீழம். தாய்மொழி தமிழ் சமயத்தால் வேறுபட்டாலும் தாயகத்திலும் மொழியிலும் முஸ்லிம் மக்கள் தமிழரில் இருந்துவேறுபடுத்தப்பட முடியாதவாகள் அத்தகைய இறுக்கமான உறவு தமிழ- முஸ்லிம் மக்களிடைய்ய உண்டு.

தமது சொந்த இருப்பிடங்களை விட்டு முஸ்லிம்கள் வெளியேறியதனால் அவர்கள் பட்ட இன்னல்கள், கஷ்டங்கள் பல எனினும் அன்றைய ஆட்சியாளர்கள் முஸ்லிம் மக்களின் இடம் பெயர்வை சீர் படுத்த விரும்பவில்லை.

ஆனால் இப்போது மலாந்த புதுவருடத்தோடு முஸ்லிம் மக்களை யாழ்ப்பாணத்தில் மீளவும் குடியமர வருமாறு விடுதலைப் புலிகளின தலைவரால் விடுக்கப்பட்ட அழைப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்நத ஓர் நிகழ்வாகும்.

எனவேஇடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வருகின்ற போது அவர்களின் இருப பிடங்களை அவர்களிடம் சந்தோஷமாகஒப்படைப்பது அங்கு குடியிருக்கும் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

# கூட்டுழைப்பு, விட்டுக்கொடுத்தல்களின் மூலம்

# உடல்-மன இறுக்கங்களைக் கட்டுப்படுத்தலாம்

இன்றைய நாட்களின் மன இறுக்கங்களைப் பற்றிப் பரவலாகப் பேசப்படுவதைக் காணலாம். ஏன் எனில் நாம் காணும்ஒவ்வொரு மனிதரும் மன உளைச்சல் அல்லது மன இறுக்கத்தைப் பற்றிப் பேசுவர். அல்லது அதற்குரிய அடையாளங்களைக் கொண்டிருப்பர். இதயத்தாக்குகளை நாம் உன்னிப்பாக ஆராய்வோமாயின் ''இறுக்கம்'' என்ற சொல் ஒரு பெரிய காரணியாக அமைவதைக் காணலாம்.

மன இறுக்கம்என்பது கவலை, ஏக்கம், கோபம், பதைபதைப்பு அல்லது அச்சம் கலந்த உணர்வு போன்ற காரணிகளைத் தன்னகத்தே கொண்டதாக அமையும். இது ஒரு வேலையை செய்து முடிக்க அல்லது செயலில் வெற்றிபெற அழுத்தி நெருக்கி வைக்கப்பட்டுள்ள நிலையாகும். சில சந்தர்ப்பங்களில் மன இறுக்கம் ஒருவனுடைய வாழ்வையே சீர்குலைக்கும் அளவிற்கு பெரும் தாக்கங்களை உண்டாக்குகின்றது.

மன இறுக்கம் இல்லாதவர் இல்லை.

இன்றைய எமது சூழ்நிலையில் மனஇறுக்கமானது ஆண்-பெண் என இரு பாலாரையும், எல்லா வயதினரையும் சமுதாயத்தின் எல்லா நிலைகளிலும் உள்ளவர்களையும் தாக்குகின்றது. இது எவ் வேலைகளைச் செய்பவர்களையும்எவ்வகையான வாழ்க்கையை வாழ்பவர்களையும் கூட விட்டுவைப்பதில்லை.

ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு விதமான மன இறுக்கம் உருவாகும். மன இறுக்கம் இல்லாதவர் இருக்க முடியாது. எல்லாவகை மன இறுக்கமும் தீமை செய்பவையாகஇருக்கமுடியாது. சிலமன இறுக்கங்கள் ஒருவரை சிந்திக்கத் தூண்டுவனவாயும், ஆக்கபூர்வமாகச் செயற்பட வைப்பதாயும், கடினமாக உழைக்க ஊக்கம் கொடுப்பதாயும் ஒரு சாதனையைச் செய்து முடிக்கத் தூண்டுவதாயும் அமையலாம். இவ்வகையானவை நல்ல விளைவைக் கொடுப்பவையாக அமைவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக ஆசிரியர் ஒருவர் கணிப்பீடு அல்லது பரீட்சை வைக்கப்போவதாக அறிவித்தால் மாணவர்கள் அவரது பாடத்தை சிரத்தையுடன் ஊன்றிப் படிப்பார்கள். மேலும் ஆசிரியர் எதை அல்லது எவற்றை முக்கியமாக எண்ணுகிறாரோ, அவற்றைப் படிக்கும்படி மாணவர்களைத் தூண்டுகிறது. இவ்வாறே போட்டிகளில் பங்குபற்றும் போதும் மன இறுக்கம் உண்டாகிறது. எம்மால் முடிந்தளவு திறம்படச் செயலாற்றும் வண்ணம் தூண்டுகிறது. இவ்வாறான மன இறுக்கங்கள் அனுபவிக்கக் கூடியதாகவும் பயனுள்ளதாகவும் அமைகின்றது.

## அருண்மொழி

அச்சுவேலி

எப்போது கெடுதல்

மன இறுக்கம், மன உணர்வை அல்லது ஆன்ம நலனைப் பாதிக்கும் போது கெடுதலாகின்றது. ஒருவரிற்கு ஒரு விதமான சட்ட திட்டங்கள், ஒழுங்கு முறைகள் வசதியானதாக அமையலாம். ஆனால் அதே சட்ட திட்டங்கள் இன்னொருவரிற்கு கட்டுப்பாடு மிக்கதாகவும் எரிச்சலைக் கிளப்பி கோபமூட்டுவதாகவும் அமையலாம். முதலாமவரிற்கு எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாத அதேவேளை மற்றவரிற்கு தீமை பயக்கும் விளைவாகவே இருகின்றது.

மன இறுக்கம் உண்டாவதற்கான சந்தர்ப்பங்கள் பல உள்ளன.

1. தீர்மானம் எடுக்கும் போது

தீர்மானங்களை எடுக்கும் போதும் மன இறுக்கம் ஏற்படுகிறது. வாழ்நாள் முழுவதும் எப்படியான வேலையைச் செய்வது, எதிர்காலத்தை எப்படி அமைத்துக் கொள்வது, காதலிப்பதா அல்லது விடுவதா, திருமணம் செய்வதா இல்லையா, செய்யும் தொழிலை மாற்றுவதா விடுவதா, இப்படியும் இதே போல் வேறு பல முடிவுகளையும் எடுக்கும் போதும் ஒருவனிற்கு மன இறுக்கம் உண்டாகிறது.

2. மற்றவர்களுடனான உறவைப் பேணும் போது

மற்றவர்களுடன் நாம் கொண்டுள்ள உறவுகள் திருப்தியளிப்பனவாக அமையலாம் அல்லது, முரண்பாடு உடையதாகவும் அமையலாம். ஆனால் முரண்பாடுகள் எழும் நிலையில் மன இறுக்கம் உண்டாகின்றது.

பொறுப்புக்களைஏற்கும் போது

பொறுப்புக்களை தலைமேல் சுமக்கும் போதும் மன இறுக்கம் உண்டாகின்றது. பணவிடயம், வேலைப்பளு இவற்றின் காரணமாகவும், குறித்த பணியை சிறப்புடன் முடிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஆகியவற்றாலும் மன இறுக்கம் உண்டாகின்றது.

சூழ்நிலை

சிலருக்கு உரத்தஓசையுடன் ஒலியைக் கேட்பதில் அலாதிப் பிரியம் இருக்கும். இது இன்னொருவரிற்கு ஆத்திர மூட்டுவதாகவும் பொறுமையைச் சோதிப்பதாயும் அமையும். மேலும் தனிமையினால் மன இறுக்கம் உண்டாகின்றது. மற்றவர்களுடன் கலகலப்பாகப் பழகாது ஒதுங்கி இருப்பவர்கள் இதனால் அதிகம் பாதிக்கப் படுவார்கள்.

தாழ்வு மனப்பான்மை

சிலரிற்கு தாழ்வு மனப்பான்மை காரணமாகவும் மன இறுக்கம் உண்டாகின்றது. தங்களிற்கு சிறந்த ஆளுமை இல்லை தகுதி இல்லை என்பதாலேயோ அல்லது மற்றவர்களுடன் கலந்து பழகத் தகுதி இல்லை என்ற நினைப்பிலோ தங்களைப் பற்றிய மற்றவர்களின் தவறான கணிப்பிலோ பொருத்தமில்லாத மனப்பான்மையில் மிதப்பார்கள்.

மன இறக்கம் உண்மையில் உடல் நலத்தைக் கெடுக்கும் அளவிற்கு மனித உடலில் எதிர்விளைவுகளையும் உண்டாக்கும் இன்றைய கால கட்டத்தில் மன இறுக்கங்கள் அடிக்கடி எம்மைத் தாக்குகின்றன. இதனை எவ்வாறு சமாளிப்பது என ஆராய்வோம்.

தொழில் புரியும் இடத்துடன் அலுவலக வேலைகளை விட்டு விடுதல் வேண்டும். வீடுவரை கொண்டுவரின் கவலை அதைப்பற்றியேதான் இருக்கும். ஓய்வு உணர்வே இருக்காது, வேலை நேரம் முடிந்ததும் அதனை அப்படியே விட்டு விடுதல் வேண்டும். மிகுதியை நாளை மேற்கொள்ளலாம். இதனால் பாதகம் ஒன்றும் ஏற்படப் போவதில்லை.

★ எம்மால் அடையப் படக்கூடிய இலக்குகளை இனங்கண்டுஅதற்கேற்ப செயற்படுதல் வேண்டும். பொருத்தமில்லாத அல்லது சாத்தியப்படாத விடயங்களை விட்டுவிட்டு ஒவ்வொரு நாளும் நடைமுறையில் சாத்தியப்படக் கூடிய விடயங்களை செயற்படுத்துவதில் ஈடுபடல் வேண்டும்.

★ ஏனையவர்களுடன் நட்பையும் நல்லுறவையும் வளர்த்துக்கொள்வதன் மூலம் இணக்கத்தை ஏற்படுத்த முடியும். ;மற்றவர்களது தவறுகளை பெரிது படுத்தாமல் அப்படியே ஏற்றுக் கொள்ளப் பழகுதல் வேண்டும். மற்றவர்களை உள்ளது உள்ளபடியே ஏற்றுக் கொள்ளப் பழகுதல் வேண்டும்.

★ ஓய்வும் பொழுது போக்கும் விளையாட்டுக்களில் ஈடுபடுதலும் மன இறுக்கத்தைக் குறைக்கும் உண்மையில் ஒவ்வொரு நாளும் சில ஆக்கபூர்வமான தளர்வுச் செயற்பாடுகளில் ஈடுபடல் வேண்டும். தியானத்தை மேற்கொள்ளலாம். விருப்பமான இசையினை அல்லது பாடல்களை இரசிக்கலாம்.

★ விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையினால் மன இறுக்கத்தைதவிர்த்துக்கொள்லாம். உங்கள் நடவடிக்கை சரியானதாகவே இருந்தாலும் ஒரு சில நேரங்களில் விட்டுக் கொடுத்தல் வேண்டும். எனது வழிதான் சரி என்று பிடிவாதத்தினால் நிற்பதனாலும், வாதத்தில் வெல்வதனாலும் மற்றவர்களுடனான உறவை சேதப்படுத்தியமையினால் ''தோற்று விட்டீர்கள்'' என்றே சொல்லலாம்.

எனவே ''வாழு- வாழவிடு'' என்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதன் மூலமும், கூட்டுழைப்பின மூலமும் மன இறுக்கத்தை தவிர்த்து வாழலாம்.

## தினசரி தியானம்

### விமோசனம்

நான் அதுவாயிருக்க
நீ செய்சித்ர மிக நன்றுகாண்

- தாயுமானவர்

பாங்கனைத்துக்கும் பெட்டகமே, பட்டப் பகலில் கண்ணைப் பொத்திக் கொண்டுகாரிருள் என்று நான் குறை கூறலாகாது.

உலகத்தோடு நாம் வைக்கும் இணக்கத்தைப் பொறுத்துள்ளது விமோசனம் என்பது பொருந்திய இணக்கம் இனிமையையும் ஒற்றுமையையும் உண்டு பண்ணுகிறது. பொருந்தாத இணக்கம் இன்னாததையும் வேற்றுமையையும் வளர்க்கிறது. காலில் தைத்த முள் போன்றது பொருந்தாத இணக்கம். கையில்பிடித்த ஊசிபோன்றது பொருந்திய இணக்கம். உலகிலுள்ள யாவையும் நமக்கு அனுகூலமானதாக மாற்றி எடுத்துக் கொள்வதே விமோசனம்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

## சொந்தங்களைக் காண குடாநாட்டு இளைஞர்கள் வன்னிக்கு படையெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 8 ஆம் திகதி யாழ். குடா நாட்டிற்கான தரை வழிப் பாதை திறந்ததையடுத்து பெரும் தொகையான இளைஞர்கள் வன்னி நோக்கி படையெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

12 வருடமாக தடைப்பட்டிருந்த இப் பாதை திறக்கப் பட்டதையடுத்து தமது உறவுகளை பார்க்கும் நோக்குடனும், வரலாற்றுச் சிறப்பு மிக்க ஓயாத அலைகள் மூலம் விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்ட ஆனையிறவுப் படைத்தளப் பகுதியினை பார்வையிடும் நோக்குடனும் பெரும்தொகையான இளைஞர்கள் வன்னிப் பகுதி நோக்கி செல்கின்றனர்.

மேலும், இது வரையும் வன்னிப் பெரு நிலப் பரப்பினைப் பற்றி தெரியாத இளைஞர்களும் அதன் சிறப்பினை அறிந்து கொள்வதற்காகவும் இப் பயணங்களினை மேற்கொள்கின்றனர்.

(உ-10)

## வவுனியா காங்கேசன் ரயில்பாதை

(கொழும்பு)

வவுனியாவுக்கும்காங்கேசன் துறைக்கும், வாழைச் சேனையில் இருந்து மட்டக்களப்புக்கும் இடையிலான ரயில் பாதைகள் புனரமைக்கப்படவுள்ளன.

இவற்றைபுனரமைப்பதற்கு 300 கோடி ரூபா செலவாகும் என்றும் இவற்றை முழுமையாக புனரமைப்புசெய்வதற்கு $2\frac{1}{2}$ வருடங்கள் தேவைப்படும் எனவும் ரயில்வே பொது முகாமையாளர் பிரியால் டிசில்வா தெரிவித்துள்ளார்.

(எ-5

# சமாதானத்திற்கு குரல்கொடுக்குமாறு தலைவர் பிரபாகரன் வலியுறுத்தினார்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

சமாதனத்திற்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுங்கள். என தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தம்மைச் சந்தித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை கடந்த 12ந் திகதி கிளிநொச்சி யில் தமிழ்த்தேசிய கூட்டமைப் புப் பாராளுமன்ற உறுப்பினர் கள் சந்தித்தபோது மேற்கண்ட வாறு தம்மிடம் குறிப்பிட்டுள்ள தாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நமது நிருபரிடம் தெரிவித் துள்ளார்.

(3ம் பக்கம் பார்க்க)

# சிம்ரனின் சகோதரி நடிகை மோனல் நேற்றுத் தற்கொலை

(சென்னை)

தமிழ்த் திரைப்பட உலகின் நட்சத்திரமான மோனல் நேற்று பிற்பகல் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

புத்தாண்டு தினமான நேற்று தமிழ் ரசிகர்களுக்கு கனவுக் கன்னியான மோனலின் பிரிவு பேரிடியாக அமைந்துள்ளது.

பிரபல முன்னணி நடிகை சிம்ரனின் தங்கையான இவர் சென்னையில் தனது வீட்டில் உள்ள அறையில் தூக்கில் தொங்கி இறந்த நிலையில் காணப்பட்டார்.

''பார்வை ஒன்றே போதுமே'' என்ற திரைப்படத்தின் மூலம் திரைவானில் புகழ் உச்சியில் பறந்த இவர் பல திரைகளில் முன்னணிக் கதாநாயகியாகத் திகழ்ந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இதேவேளை மோனலின் மரணத்தில் சந்தேகம் எழுந்துள்ளதால் தற்கொலையா அல்லது கொலை செய்யப்பட்டாரா என்பதை கண்டறிவதில் பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

### முஸ்லிம்- மலையக...

இவர்களை புலிகளின் நடுவப்பணியகத்தைச் சேர்ந்த புலித்தேவன், தங்கன் ஆகியோர் வரவேற்றனர்.

நேற்று இடம்பெற்ற இச் சந்திப்பில் பிரபாகரன் மேலும் தெரிவித்திருப்பதாவது;

மலையகத்தில் வாழும் தமிழ் மக்களுக்காக விடுதலைப் புலிகள் இயக்கம் எப்போதும் குரல் கொடுக்கத் தயாராக இருப்பதுடன் அதற்காக நாம் தயங்கவும்மாட்டோம்.

மலையகத்தில் உள்ள அரசியல் தலைவர்கள்பிளவுபட்டிருக் காது ஒன்றுபட்ட ஒரே சக்தியாக செயற்பட்டு மலையக மக்களின் உரிமைகளுக்காக போராட வேண் டும் என்று மலையகத் தலைவர் களிடம் தலைவர் பிராபாகரன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தைப் பிரதிபலிக்கும் தலைவர்கள், எமது செயற் திட்டங்களை, அரசியல் வேலைத் திட்டங்களை பற்றிக் கலந்துரையாடி எந்த வழியில் இரு சமூகத்தினரும் ஒத்துழைக்க முடியுமென்பதனை தொடர்ந்து பேசி முடிவு காண வேண்டும் என்றும் இச்சந்திப்பின் போது முடிவு செய்யப்பட்டது.

விடுதலைப் புலிகளினுடனான இச்சந்திப்பின்போது விடுதலைப் புலிகளின் சார்பில் தலைவர் வே.பிரபாகரன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசி யற்த் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் திருமதி. பாலசிங்கம், வே. பாலகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரு கட்டமாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் எம்.எஸ்.செல்லச்சாமி, முத்துசிவலிங்கம், ஆர்.யோகரா ஜன் உட்பட 5 பிரதி நிதிகளும்

அமைச்சர் பெ.சந்திரசேகரன் தலைமையில் இராதாகிருஷ்ணன் உட்பட 9 பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (வ)

### பேச்சுவார்த்தைக்கு...

ரும் நோக்குன்றனர் இந்தத் தடையை நீக்கும் விடயத்தில் சட்ட ரீதியாகவோ அல்லது கோட்பாட்டு ரீதியாகவோ எவ்வித சிக்கல்களும் இருப்பதாக எமக்குத் தெரிய வில்லை. என்றும் அவர் கூறினார் (த)

### பொங்கு தமிழ்...

களிலுமிருந்து எழுச்சிப் பேரணிகள் ஆரம்பமாகி யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானத் தில் ஒன்று கூடி பொங்கு தமிழ் நிகழ்வை உணர்வு பூர்வமாக நடத்துவர். (வ)

## கண்ணீர் அஞ்சலி

அன்னையின் அரவணைப்பில் 22 - 05 - 1960

ஆண்டவனின் திருவடியில் 13 - 04 - 2002



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாக அதிகா ரியாக கடமையாற்றிய வைத்தியலிங்கம் சந்திர குமார் 13.04.2002ல் திடீரென மரணமாகிய செய்தி எமது நிர்வாக அமைப்புக்கு ஒரு பேரிழப்பாகும்.

இவரது இழப்பால் துயருற்றிருக்கும் மனை விக்கும், பெற்றோருக்கும் எம் ஆழ்ந்த அனுதாபத் தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

183, 1ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

இவ்வண்ணம் நிர்வாகம்.

[C/3960]

**A/L-02 உயிரியல் மாணவர்கள் கவனத்துக்கு**

**இன்று அவசர அவசிய கலந்துரையாடல்(monday)**

வழங்குபவர்:- ம.சுகந்தன், B.sc

இடம்:- அறிவொளி, நல்லூர்

காலம்:- 15-04-02, 4.30-6.00 p.m

* விசாகா கல்லூரி மாதிரி வினாக்கள் கலந்துரையாடப்படும்

அனுமதி இலவசம்

[C/4971]

**நாகம்ஸ்- சுன்னாகம்**

ரொப்ஸ்ரார் பிரசாந், சிம்ரன், வடிவேலு நடித்த

**தமிழ்**

ரீல்ஸ்

காட்சிகள் : 11.00, 3.00, 6.30 (பு.நே)

[C/3956]

**யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**

**சங்கப் பொதுச் சபை அங்கத்தவர்களின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் 2002ம் ஆண்டுக்கான நிர்வாக – சபைத்தெரிவும்**

**(05.05.2002)**

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் 05.05.2002 ஞாயிற்றுக் கிழமை காலை 11மணிக்கு சங்கத் தலைவர் திரு. சி. சுந்தரலிங்கம் தலைமையில் சங்கத் தலைமைச் செயலகத்தில் (559, நாவலர் வீதி, யாழ்ப் பாணம்) நடைபெறவிருக்கின்றதென்பதை தங்களுக்கு தெரி வித்துக் கொள்கின்றோம்.

உபவீதி 26இல் 7வதின் பிரகாரம் மேற்படி வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஏதாவது பிரேரணையை பிரேரிக்க விரும் பின் அப்பிரேரணைப் பிரதியொன்றை 29.04.2002 க்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டு மென்று கேட் டுக் கொள்கின்றோம்.

மேற்குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறின் பிரேரணைகள் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறமாட்டாதென்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சி. சுந்தரலிங்கம் மாவட்ட தலைவர்

கு. காந்தரட்ணம் மாவட்ட செயலாளர்

[C/3958]

## மின் பாவனையாளர்களே! மின்வெட்டா! கவலையை விடுங்கள்

**இதோ வந்துவிட்டது!!**

**DC TO AC** இன்வேட்டர் **(Inverter) TMG - 10B 300W /500W**

இன்வேட்டர் & பற்றரி சாஜ்ஜர் **Full Automatic DC - AC TMG 1B 300W/600W**

டிஜிட்டல் இன்வேட்டர் **Nippon Power 300VA/500 - 650VA**

இவற்றுடன்

**daytron 14"** கறுப்புவெள்ளை **TV**, சகலவிதமான மின்விசிறிகள் PHILIPS 14" கலர் **TV**,

சகல விதமான மின் விசிறிகள் NIPPON மின் விசிறிகள்

PANASONIC டெக், றேடியோ, கசட் வகைகள், SOLAR லைற் வகைகள், நில்கமல் பிளாஸ்ரிக் மேசைகள், கதிரை வகைகளையும் இவை மட்டுமா இவற்றுடன்

கால்நடை மருந்து வியாபாரிகளே! பண்ணையாளர்களே!

ஆடு, மாடு, கோழி, மற்றும் செல்லப்பிராணிகளுக்கான மருந்து வகைகள் நியாய விலையில் விற்பனையாகின்றன. கால்நடை வைத்தியர்களின் சிபார்சுடன் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட மருந்துகளை இன்றே பெற்றுக்கொள்ளலாம்.

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் நியாய விலையில் பெற்றுக் கொள்ள யாழ் வினியோகஸ்தர்கள்

**ஸ்ரீ மகா விஷ்ணு**

No. 70,72, Stanley Road, Jaffna.

General Merchants & Commission Agents

[C/3957]

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.04.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.